Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 135/2023

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | குணசேகரன் |
| Father's Name | : | குஞ்சான் செட்டியார் |
| Village | : | பூவரசகுடி |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 15.10.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் பூவரசகுடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மாற்றுத்திறனாளி என்பதால் வேலை எதுவும் செய்யவில்லை. விபத்து சம்பவத்தில் காயம்பட்டு இறந்துபோன வெங்கடேசன் எனது மகன். விபத்து சம்பவத்தில் காயமடைந்த மணிகண்டன், பைசல், பர்கான் ஆகியோரையும் தெரியும். என் மகன் வெங்கடேசன் ஊர் காவல் படையில் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் இருந்து வந்தார். என் மகன் வெங்கடேசன் அவனுடைய நண்பர்கள் மணிகண்டன், பைசல் மற்றும் ஒரு இஸ்லாமிய நண்பர் ஆகியோருடன் வெள்ளி நகை வியாபாரத்திற்காக காரைக்கால், கறம்பகுடி, அறந்தாங்கி ஆகிய பகுதிகளுக்கு சென்றுவருவார். அதேபோல **03.06.2023**ஆம் தேதி காலையிலேயே என் மகன் வெங்கடேசன் அவருடைய நண்பர்கள் மணிகண்டன், பர்கான், பைசல் ஆகியோருடன் மேற்படி மணிகண்டன் என்பவருக்கு சொந்தமான **1872** என்ற பதிவெண் கொண்ட காரில் சென்றுவிட்டு அக்னி ஆற்றுப்பாலம் அருகே வந்துகொண்டிருந்தபோது எதிரே வந்த **2905** என்ற பதிவெண் கொண்ட டாடா ஏஸ் போன்ற லோடு வண்டி மோதி மாலை விபத்து ஏற்பட்டதாக மாலை **6.00** மணியளவில் எனக்கு ஊர்க்காரர்கள் சொல்லி தெரிந்துக்கொண்டேன். நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சென்று காயமடைந்த என் மகன் வெங்கடேசனை பார்த்தேன். அவருடன் வந்த **3** பேருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. அன்றைய தினமே இரவு **7.30-8.00** மணிப்போல சிகிச்சையில் இருந்த என் மகன் வெங்கடேசன் மருத்துவமனையில் இறந்துவிட்டார். மற்ற மூவரும் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தினை ஓட்டிவந்த நபரின் பெயர் அரவிந்தன் என்றும், அவர் பேராவூரணி பக்கம் உள்ள ஊரை சார்ந்தவர்

என்றும் தெரிந்துக்கொண்டேன். மறுநாள் கீரமங்கலம் காவல் நிலையத்தில் சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் **8**ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தட்டச்சு செய்து அளித்த புகார் மனுவினை எங்கு வைத்து தட்டச்சு செய்தேன் என்பது தற்போது ஞாபகம் இல்லை. சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் மனு அ.சா.ஆ.**1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் அளித்த புகார் மனுவினை யார் தட்டச்சு செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. இறந்துபோன எனது மகன் வெங்கடேசனுக்கு சம்பவ சமயத்தில் நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்காக உரிமம் இல்லை என்றால் வாகன ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பம் செய்திருந்தான். உரிமம் பெற்றானா என்பது தெரியவில்லை. எனது மகன் வெங்கடேசன் மற்றும் அவனுடன் சென்றதாக கூறப்படும் பர்கான், பைசல், மணிகண்டன் ஆகியோருக்கு மதுஅருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரினை எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது மகன் இறந்த துக்கத்தில் இருந்ததால் தேதி ஞாபகம் இல்லை. எனது மகன் காரினை கவனக்குறைவாக ஓட்டிச்சென்றதாலேயே விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக்குறைவினால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>